## தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

ID.No.86/2022 தேதி : 09.09.2024

சாட்சி :- WW1

இந்த நீதிமன்றத்து Bench Clerk Gr.I திருமதி.V.பானுமதி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ம் தேதி பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தரணிதரன் | கிராமம் | : | கோடம்பாக்கம் |
| தந்தை பெயர் | : | திரு.வரதராஜன் | தாலுகா | : | சென்னை |
| பாலினம் | : | ஆண் | மாவட்டம் | : | சென்னை |
| வயது | : | 32 | நேரம் | : | 12.22 a.m to.12.52 a.m |

**தொ.த.சா.1 திரு.தரணிதரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை**

தொ.சா.ஆ.4 தான் என்கு வழங்கப்பட்ட முதலாவது குற்றச்சாட்டு குறிப்பாணை என்றால் ஆமாம். குற்றச்சாட்டு குறிப்பாணையுடன் KPMG Audit Report இணைத்து அனுப்பப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.1. நான் குற்றச்சாட்டு குறிப்பாணை கிடைத்தவுடன் கால அவகாசம் கேட்டு 23.12.2020 தேதியிட்ட கடிதத்தை அனுப்பினேன் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.2. அதில் குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் நி.சா.ஆ.1 ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழில் மொழிபெயர்த்து தரசொல்லி கேட்டேன் என்றால் ஆமாம். தமிழிலில் மொழிபெயர்த்து எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். குற்றச்சாட்டு குறிப்பாணை தமிழாக்கம் நி.சா. ஆ.3. தொ.சா.ஆ5திற்கு நிர்வாகம் கொடுத்த பதில் தான் என்னிடம் காட்டப்படும் 27.12.2020 தேதியிட்ட கடிதம் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.4. KPMG Audit Report தமிழாக்கம் 30.12.2020 தேதியிட்டது நி.சா.ஆ.5. தொ.சா.ஆ.6 நான்

கொடுத்த கடிதம் என்றால் ஆமாம். தொ.சா.ஆ.6வுடன் ஒரு இணைப்பு வைத்திருந்தேன் என்றால் ஆமாம். அந்த இணைப்பு நி.சா.ஆ.6. உள்துறை விசாரணை நடந்தது என்றால் ஆமாம். அதில் நிர்வாக தரப்பில் பிரதிநிதியை நியமித்து அனுப்பிய கடிதம் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.7. திரு.மோகன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். அதற்கான கடிதம் அது நி.சா.ஆ.8. விசாரணை தேதி, இடம் நடைபெறும் தகவல் தெரிவித்து 30.01.2021 தேதியிட்ட கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.9. முதல் விசாரணை தேதிக்கு மட்டும் தான் தகவல் தெரிவித்தார்கள் மற்ற விசாரணை தேதிகளில் முறையாக தகவல் தெரிவிக்கவில்லை. 04.02.2021 நடைபெற்ற விசாரணைக்கான குறிப்புகள் என்னிடம் காட்டுவது என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.10. விசாரணை நடைபெறும் நடைமுறை அறிவிப்பு எனக்கு வழங்கப்பட்டது. அது நி.சா.ஆ.11.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுதலின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/.S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:09.09.2024